

# தமிழ்ச் சிட்டு

கும்பம் 2033
( பிப்பிரவரி - 2002 )

விலை :
உரு.3.00

குரல் 25
இசை 2

சிறுவர்
கலை
இலக்கியத்
திங்களிதழ்

# நம்பிக்கைகள் பல உண்டு!

நம்பிக்கைகள் பல உண்டு!—அவை
நம்பிக் கெடுதற்கும் ஆட்கள்இங் குண்டு!
தம்பி, எது எதனாலே—ஒன்று
தாழ்வுறும் வாழ்வுறும். தேர்க முன்னாலே!

முந்தி நடப்பதனாலே—ஒன்று
முன்னேறும் என்பது முயற்கதை போல!
பிந்தி நடப்பதும் வெல்லும்—ஆனால்
பிந்துவ தெல்லாமே வெல்லுமோ? சொல்லும்!

சொந்த முயற்சிகள் வேண்டும்—இடைச்
சோம்பலும் மயங்கலும் தயங்கவே தூண்டும்!
வந்தவழி திரும்பாதே!—எனில்
வருகின்ற வழியெல்லாம் செலவிரும் பாதே!

ஆடுபோல் அங்குமிங் காகத்—தேடி
அலையாதே; குலையாதே; மனஞ்சிதறாதே!
நாடுமொழி இனம் நாடு!—ஒன்றை
நாடிய பின்கையை எதற்கும்உத றாதே!

தந்தன தோம்தரி கிடதோம்—எதும்
தாழ்ந்தபின் உயர்வது பெரும்இட ராய்ப்போம்!
சிந்தனை செய்! ஒன்று தேர்வாய்!—பின்னர்
செயலொன்றே செயல். என மனம்,வினை நேர்வாய்!

திந்திமி தோம்திமி தோம் தோம்—அட
தேவையி லாத நினைவுகள் போம் போம்!
நம்பிக் கைகள் பல உண்டு.

— பாவலரேறு பெருஞ்சித்திரனார்—

-1982

**தமிழ்ச்சிட்டு**

*சிறுவர் கலை இதழ்*


## குரல்–25 இசை–2


"இன்றைய பயனோ
நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர்
நாளைய உலகம்!
நன்று செய்வதே
நமக்குநல் வாழ்க்கை
என்றும் அழியாது
இருப்பது புகழே!

– பாவலரேறு


நிறுவனர்:
**பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

ஆசிரியர்:
**தாமரை பெருஞ்சித்திரனார்**

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
**'தமிழ்ச்சிட்டு'**
செந்தமிழ் அடுக்ககம்,
மேடவாக்கம் கூட்டுச்சாலை,
சென்னை- 601 302.
தொலைபேசி எண் : 227 0231


### பகட்டறிவு

நம்மில் பலர் எதையும் தெரியாது என்று சொல்லிக் கொள்வதில்லை.

உண்மையிலேயே ஒன்றைப் பற்றி ஒருவருக்கு எதுவும் தெரியவில்லையானாலும், தனக்குத் தெரிந்ததுபோல் பேசுவது வழக்கமாகி விட்டது.

தெரியவில்லை என்று சொல்வதை ஏதோ குறை என்று அது போன்றவர்கள் எண்ணிக் கொள்கின்றனர்.

எனவேதான், தெரிந்ததுபோல் பேசிக் கொள்கின்றனர்.

உலகின் அனைத்துத் துறை அறிவையும் ஒருவர் எளிதே பெற்று விட இயலாது. நாம் காண்பதும், கற்பதும் மிகமிகக் குறைவே.

நாம் கண்டிராத, கேட்டிராத, அறிந்து கொள்ளாத செய்திகள் ஏராளமாய் உண்டு.

அந்தச் செய்திகளை அறிந்து கொள்ள வேண்டிய ஆர்வம் நமக்கு உண்டாகிறபோது, நம்மிடையே அது தொடர்பான தேடல் உருவாகிவிடும்.

மாறாக, நமக்கு அந்தச் செய்திகளைத் தெரிந்ததாகக் கூறிக் கொள்வோமானால், நாம் தெரிந்தது போல் நடிக்கவும் வேண்டும், பிறருக்குத் தெரியாமல் அதைப் பற்றித் தெரிந்து கொள்ளவும் வேண்டும்.

அது மிகவும் கடினமானது, பொய்ம்மையானது. திருடனுக்குத் தேள் கொட்டியதுபோல, கத்த முடியாமல் வலியை ஏற்றுக்கொண்டு நடக்கும் பொய் வாழ்க்கை யானதாகிவிடும்.

எனவே, நமக்குத் தெரிந்தவற்றைத் தெரிந்தது என்பதும், தெரியாதவற்றை தெரியாது என்பதுமே அறிவின் வளர்ச்சிக்குரியதும், பண்பின் மலர்ச்சிக்கு உரியதும் ஆகும்.

குறைவாகத் தெரிந்து வைத்துக் கொண்டு நிரம்பத் தெரிந்து கொண்டவர் போலப் பேசிக் கொள்பவரும் உள்ளனர்.

இவர்களும் மேற்சொன்ன தன்மையினர்தாம்.

அவர்களின் அத்தகைய போக்கையே 'பகட்டு அறிவு' என்போம்.

பகட்டான அறிவினராக தம்மைப் பொய்மைப்படுத்திக் கொண்டு வாழ வேண்டியதில்லை.

அது அறிவை வளர்க்காது, அறிவுள்ளவர்களாகவும், தெளிவுள்ளவர்களாகவும் நாம் வளர வேண்டும்.

*


---

??? ??? ???

## புதிர்


??? ??? ???

1. ஒன்று போலான இரண்டு மீன்பிடிப் படகுகள் கரையை நெருங்கிக் கொண்டுள்ளன. கரையில் நின்று கொண்டிருக்கும் மாந்தர் இரண்டு படகுகளில் ஒன்றில் இருந்த மீனவரிடம் ஒரு கயிற்றை எறிகிறார்; கயிற்றின் மற்றொரு முனையை ஒரு கட்டுத் தறியில் கட்டுகிறார். கரையில் உள்ளவர் மற்றொரு மீனவரிடம் கயிற்றை எறிகிறார். இருவரும் கயிற்றை இழுக்கின்றனர். இரண்டு மீனவர்கள், கரையிலுள்ளவர் ஆகிய மூவருமே தம் பணிகளில் ஒரே அளவு முயற்சியைப் பயன்படுத்துகின்றனர். அப்படியானால் இரண்டு படகுகளில் எந்தப் படகு முதலில் கரையை அடையும்?



## ஆரன் முனை:

இது தென் அமெரிக்காக் கண்டத்தின் தென் கோடி முனையாகும். ஆரன் தீவிலுள்ளது. இது தென் துருவத்தின் அண்மையிலிருப்பதால் குளிர் அதிகம். நிலத்திணைகள் முளைப்பதில்லை. பனாமா கால்வாய் வெட்டுமுன் கப்பல்கள் இம்முனையைச் சுற்றிச் சென்றன. இங்கு அதிவேகப் புயல்கள் எழுகின்றன. முதலில் 1578இல் வயவர் பிரான்சிசு திரேக்கு இம்முனையை அடைந்தார். ஆயினும் 1615இல் இங்குச் சென்ற டச்சு மீகாமன் தங்கள் நாட்டிலுள்ள ஒரன் மாநிலத்தின் பெயரை வைத்தனர். இதுவே நாளடைவில் ஆர்ன் என்றாயிற்று. *




---

### புதிர் – விடை:

1. மீன்வரும் கரையில் இருக்கும் மாந்தரும் கயிற்றை இழுப்பதால் கயிற்றில் ஏற்படும் இழுப்பு விசை இவர்களில் ஒருவரது இழுப்பு விசைக்கு இணையாகவே இருக்கும்; எனவே இந்த இழுப்பு விசைக்கும் கட்டுத்தறியின் உதவியோடு தன்னை கரையை நோக்கி இழுப்பதற்கு முதலாவது மீனவர் பயன்படுத்தும் இழுப்பு விசைக்கும் அடிப்படையில் வேறுபாடு ஏதும் இருக்காது. எனவே, இரண்டு மீனவர்களும் ஒரே காலத்தில் கரையை அடைவர். ஒருபுறம், மீனவரின் இணையான ஆற்றலும் எதிர் ஆற்றலும் கட்டுத்தறியாகும்; இன்னொரு புறம், இந்த ஆற்றல் மாந்தராவார். இதுதான் ஒரே வேறுபாடு.

# மை

எழுதுவதற்கும், அச்சிடுவதற்கும் மை பயன்படுகிறது. ஏறத்தாழ 4,000 ஆண்டுகளுக்கு முன்பு எகிபதியரும் சீனரும் மையைக் கண்டுபிடித்தனர் என்பர். கிட்டத்தட்ட அதே காலத்தில் பப்பைரசு என்னும் கோரையிலிருந்து ஒரு வகைத் தாளை(காகிதத்தை)யும் செய்யத் தொடங்கினர். அக்காலத்தில் எழுதப்பட்ட சில தாள்களை (காகிதங்களை) பொருட் காட்சிச் சாலைகளில் இன்றும் காணலாம். விளக்குக்கரி அல்லது இயல்பான கரியுடன் பசையைச் சேர்த்து அக்காலத்தில் மை உருவாக்கி எழுதினர். உரோமானியர் கடலில் வாழும் சிப்பி இனத்தைச் சேர்ந்த ஒருவகை உயிரினத்திலிருந்தும் மை உருவாக்கினர்.

இன்று எழுதவும், அச்சிடவும் தனித்தனி வகை மை உண்டு. கடுக்காயைப் பொடி செய்து கொதி நீரில் சேர்த்து வடிகட்டுகிறார்கள். பின்பு இரும்புக் கரைசலையும், சில துளிகள் கரிம அமிலத்தையும் சேர்த்துக் கறுப்பு மை உருவாக்கினார்கள். செய்தித் தாள்களும், மற்ற இதழ்களும் அச்சிடுவதற்குப் பயன்படும் மை உருவாக்க விளக்குக் கரியை ஆளி விதை எண்ணெயுடன் சேர்த்துப் பசைபோலாகும்வரை அரைத்துக் கரைப்பார்கள். அச்சுவேலைகளுக் கான மை பெரும்பாலும் எல்லா நிறங்களிலும் உருவாக்கப்படுகிறது. நாம் இயல்பாகப் பயன்படுத்தும்




ஊற்றுத் தூவல்களுக்கென்று தனி வகை மை உண்டு.

ஊற்றுத் தூவல்களுக்கான மை நீலம், கருநீலம், சிவப்பு, பச்சை, கறுப்பு முதலிய நிறங்களிலும் உருவாக்கப்படுகிறது. நிலக்கரித் 'தாரி'லிருந்து கிடைக்கும் 'அனிலீன்' சாயங்களைச் சேர்ப்பதனால் இந் நிறங்களைப் பெறலாம். படி எடுப்பதற்குரிய மை(Copying Ink) உருவாக்க இயல்பான மையுடன் சிறிது சர்க்கரை, பசை, கிளிசரின் முதலிய பொருள்களைச் சேர்த்துக் காய்ச்சுவர்.

எழுதினால் கண்ணுக்குத் தெரியாத மை வகைகளும் உண்டு. 'கோபால்ட் குளோரைடை' நீரில் கரைத்து வெண்மையான தாளில் எழுதினால், எழுதியது கண்ணுக்குத் தெரியாது. இந்தத் தாளைப் பின்னர் இலேசாகச் சூடேற்றினால் நீல நிறத்தில் எழுத்துகள் கண்ணுக்குத் தெரியும். இதேபோல் எலுமிச்சம் பழச்சாறு, பால் ஆகியவற்றில் தோய்த்து எழுதி, பிறகு சூடேற்றினால் பழுப்பு நிறத்தில் எழுத்துகள் தெரியும்.


சலவையாளர் துணிகளில் அடையாளம் இடுவதற்கென்று எளிதில் அழியாத மையைப் பயன்படுத்துகிறார்கள். வெள்ளி உப்பை அம்மோனியக் கரைசலில் சேர்த்து இந்த மை செய்கிறார்கள். ஒளி அல்லது. வெப்பத்தால் இது கறுப்பு நிறமடையும்.

விளக்குக் கரி, பசை இவற்றைக் கலந்து உலர்த்தி மீண்டும் நீரில் கரைத்து ஒருவகை மை (Indian Ink) செய்கிறார்கள். இது ஓவியங்கள் எழுதவும், பட அச்சு(Block) செய்வதற்கு வேண்டிய உருவங்களை வரையவும் பயன்படுகின்றது.

*

---

# தமிழ் எண் அறிவோம்!




தம்பி, நீ மும்பாய் போயிருக்கிறாயா? அல்லது வெங்காலூர் என்கிற பெங்களூர் போயிருக்கிறாயா?

அங்கு ஓடும் பேருந்துகளைப் பார்.

அதில் பேருந்து எண்கள் எல்லாம் கன்னடத்திலும், மராட்டியத்திலுமே இருக்கின்றன.

அவர்கள் மட்டும் இல்லை. உலகம் முழுக்க அவரவர்களும் அவரவர் தாய்மொழியில்தான் எழுத்துகளையும், எண்களையும் எழுதுகின்றனர்.

நாம் தமிழ்ப் பிள்ளைகளாகப் பிறந்தும் நம் தமிழின் எழுத்தும், எண்களும் நமக்குத் தெரிகின்றனவா?

ஆண்டுதோறும் வெளியிடப் பெறும் தென்மொழி நாள்காட்டி வாங்கி வீடுகளில் மாட்டுங்கள்.

தமிழ் எண்களைப் பழக்கப் படுத்துங்கள். தமிழ் அறிவோம்! தமிழராய் அறிவோம்! அறிஞராய் வளர்வோம்!

*

# உடற்பயிற்சியின் தேவை

இளம் விலங்குகளின் வளர்ச்சியை அடைபட்ட வாழ்க்கை எப்படி ஊறுபடுத்துகிறது என்று தெரிந்து கொள்ள நாங்கள் விரும்பினோம். ஆய்வை முயலிலிருந்து தொடங்கினோம். முயலை அது வளர்ந்த சிறு கூண்டிலிருந்து பெரிய புல் வெளியில் விட்டோம். சிறு முயல் குத்திட்டு அமர்ந்து இடமும் வலமும் பார்த்தது. ஏற்பான வெயில் அடித்துக் கொண்டிருந்தது. பளிச்சிடும் வண்ணப் பூக்கள் புல்வெளியில் செங்கம்பளம் விரித்தது போலக் காட்சி அளித்தன. அகன்ற திறந்த வெளி முயலுக்கு மலைப்பூட்டியது. பின்பு அது தள்ளிற்று. மறுமுறை துள்ளிக் குதித்தது. நிமையத்துக்கு நிமையம் அதன் வலிவும் பொலிவும் அதிகமானது போலத் தோன்றியது. இன்னொரு முறை மிக உயரே துள்ளுவதற்காக



அது பின்கால்களை விரைப்பாக்கிக் கொண்டது, துள்ளிற்று... பிணமாய் விழுந்தது. நாங்கள் அதன் அருகே ஓடினோம். ஆனால் அது இறந்து கிடந்தது. நெஞ்சம் திடுமென செயலற்றுப் போனதால் இறப்பு ஏற்பட்டது என்று உடற்கூறு ஆய்வு காட்டியது.

மற்றொரு கூண்டில் கருங்காடை வளர்ந்திருந்தது. கூண்டு மிகச் சிறிது. ஆகையால் அது வாழ்நாளில் பறந்ததே இல்லை. தொண்ணூற்று ஒன்றாம் நாள் அதன் தோகையில் கரிய இறகுகள் முளைத்தன. வளர்ந்த கருங்காடையிலிருந்து எவ்வகையிலும் வேறுபடாத அழகிய கரும் பறவை ஆகிவிட்டது அது. இளவேனில் வந்ததும் பெண் கருங்காடைகள் இருந்த பெரிய அடைப்பிடத்தில் அது விடப்பட்டது. இந்தப் பெரிய கூண்டில் இந்தப் பறவை கழித்த முதல் நாளும் கடைசி நாளும் அதுவே. முந்திய நாள் சிறையாளி தன் தோகையை விரித்து குரல் இசைத்து, மண பாட்டை 'முணு முணுக்க' தொடங்கிற்று. காடைகள் கலவியிடத்தில் செய்வது போலவே அது சுழன்றோடியது. திடுமென அது மல்லாக்காக விழுந்த இசிவு கண்டது போல வெட்டி வெட்டி இழுத்தது சற்று நேரத்திற் கெல்லாம் அதன் வாழ்வு முடிந்துவிட்டது அரத்த நாளம் வெடித்ததே இறப்புக்குக் காரணம் என்று உடற்கூறு ஆய்வால் தெரியவந்தது.

குஞ்சுப் பருவத்தை சிறு கூட்டில் கழித்த அன்றில் ஒன்றும் இவ்வாறே மடிந்தது. நீண்ட கார்வை கொடுத்து முதல் இசை குரல் எழுப்பியதுமே அரத்த நாளம் வெடித்து அது இறந்து போயிற்று.

இந்த ஆய்வுகள் காட்டுவது என்ன இயற்கைச் சூழ்நிலையில் பறவைகளுக்கு விலங்குகளுக்கு பழக்கமான பறத்தல் குதித்தல், பிற வகை


உடற்பயிற்சிகள் ஆகியவை இல்லாவிட்டால் அவற்றின் உள்ளுறுப்புகள் போதிய வளர்ச்சி பெறுவதில்லை. நெஞ்சம், அரத்த நாளம் ஆகியவற்றின் சுவர்கள் போதிய அளவு வலுப்படுவதில்லை. அவை மிகவும் தளர்ந்திருக்கும். அரத்த அழுத்தத்தில் ஏற்படும் திடீர் உயர்வை அவற்றால் தாங்க முடிவதில்லை. இயற்கை நிலைமைகளில்கூட, முதல் முறையாகக் கூடுகளிலிருந்து வெளியேறும் குஞ்சுகள் அதிர்ச்சியால் அடிக்கடி மடிந்தது உண்டு. வல்லூறுகள் அல்லது பிற வகை விலங்குகளிடமிருந்து தப்பி ஓடுகையிலேயே இத்தகைய மரணம் பெரும்பாலும் ஏற்படுகின்றன. ஒரு வல்லூறு வயல்வெளிக்கு மேலே கருமைனாக்களின் கூட்டத்தைத் துரத்திச் சென்றபோது சில இளம் பறவைகள் இறந்து விழுந்ததாக ஒரு முறை கேள்விப்பட்டேன். வேட்டைக்காரனின் துமுக்கி வெடியால் கலவரமூட்டப்பட்டு, தாக்குதல் எல்லைக்கு வெளியே பறந்து போய் விடுவதற்காக இளம் அன்னங்கள் சிறகுகளை முடிந்தவரை விரைவாக அடித்துக் கொல்லையில் அடிக்கடி மடிந்து விழுந்து விடும்.

இருக்கை நிலை வாழ்க்கை முயல்களை கடுமையாக ஊறுபடுத்துகிறது. அவற்றின் பின்கால் தசைகள் வலிவாயிருக்கின்றன. ஆனால் நெஞ்சம் வலுவிழந்து இருக்கிறது. தக்க வளர்ச்சி பெறாத இளம் முயலின் எலும்புகள், அது கூண்டிலிருந்து வெளியே விடப்பட்டுத் துள்ளித் தாவினால் முறிந்துகூடப் போகலாம். அகவை வந்த முயல்கூட இருபத்தைந்து நாள்கள்வரை கூண்டில் அடைக்கப்பட்டிருந்தால் தன் பின்கால் எலும்புகளை முறித்துக் கொள்ளக் கூடும்.

உடற்பயிற்சி மாந்தர்களுக்கு மட்டுமன்று, விலங்குகளுக்கும் கட்டாயம் தேவை என்பது விளங்கும்.

*

# வண்டு







பச்சை, சிவப்பு, நீலம் முதலிய நிறங்களைக் கொண்ட அழகிய பொன் வண்டுகளைப் பார்த்திருப்பீர்கள். பூச்சிகளுள் இவை வண்டு இனத்தைச் சேர்ந்தவை. வண்டுகளில் பலவகை உண்டு. சில வண்டுகள் பெரியவை; இவை 15 நூற்றளவி (செ.மீ.) நீளமிருக்கும் சில கடுகுபோல மிக நுண்ணிய்வையாக இருக்கும்.

வண்டுகளை எங்கும் காணலாம். மரக் கிளைகளிலும் நிலத்தில் இறந்து கிடக்கும் விலங்கு, மட்கிப்போன மரம், சாணம் முதலியவற்றிலும் வண்டுகள் வாழ்கின்றன. நீரிலும் சில வண்டுகள் காணப் படுகின்றன.

பூச்சிகளைப் போன்றே வண்டுகளுக்கும் நான்கு சிறகுகள் உண்டு. ஆனால் வண்டுகளுக்கு இரண்டு சிறகுகள் உடலின் மேற்புறத்திலும் மற்ற இரண்டு சிறகுகள் அவற்றுக்கு அடியில், உட்புறத்திலும் இருக்கின்றன. மேற் புறத்திலுள்ள சிறகுகள் கடினமான கொம்புப்

பொருளாலானவை. உட்புறத்திலுள்ள சிறகுகளோ சவ்வு போன்று மெல்லியதாகவும் அகலமாகவும் இருக்கும். வண்டு பறக்கும்போது வெளிப்புறச் சிறகுகள் தூக்கிக் கொள்ளும். உட்புறத்திலுள்ள மெல்லிய சிறகுகளை விரித்து வண்டு பறக்கிறது. பறக்காதபோது, உட்புறச் சிறகுகளை வண்டு மடித்துக்கொள்கிறது; வெளிப் புறச் சிறகுகள் ஓர் உறைபோல இவற்றை மூடிக்கொள்ளும். இதனால் வண்டுகளுக்கு 'உறைச் சிறகிகள்' என்றும் பெயருண்டு.

பூச்சிகளைப் போலவே வண்டுகளுக்கும் தலையில் இரண்டு உணர் கொம்புகள் உள்ளன. கண்கள் கூட்டுக் கண்களாகவும். இரையைக் கடித்துத் தின்பதற்கேற்றபடி வண்டின் வாயுறுப்புகள் அமைந்துள்ளன. இவற்றுக்குத் தாடைகள் உண்டு. கால்கள் ஆறு உள்ளன.

நிலத்திலோ, இலை, மரம் ஆகியவற்றின் மீதோ வண்டு முட்டையிடும். பூச்சிகளைப் போன்றே வண்டுகளின் வாழ்க்கையிலும் நான்கு நிலைகள் உண்டு.

வண்டுகளால் பெரும்பாலும் தீமையே விளைகிறது. நிலத்தில் விளைந்துள்ள பயிர்களையும் மரங்களின் வேர், தண்டு, கிளை, கனி முதலிய வற்றையும் வண்டுகள் துளைத்து அழித்துவிடுகின்றன. வீடுகளில் சேமித்து வைத்திருக்கும் பயிர்களிலும் அரிசி மாவு போன்ற உணவுப் பொருள்களிலும் இவை முட்டையிட்டுப் பெருகி அழிவு விளைவிக்கின்றன. சில வண்டுகளால் நன்மையும் உண்டு. மக்களுக்குத் தீமை செய்யும் சிறு பூச்சிகளை அழித்து அவை பரவாதபடி தடுக்க இவை உதவுகின்றன.

*

# கல்விக்கண்.

ச. அழகுஒளி

அம்மா நான் முதல் மதிப்பெண் வாங்கியிருக்கிறேன்.

அப்படியா மகிழ்ச்சி. இதேபோல் நீ நன்றாகப் படித்து முன்னுக்கு வர வேண்டும். அப்போதுதான் எங்களுக்கும் பெருமை.

சரியம்மா...

தரச் சான்றிதழில் தன் கையொப்பத்தைப் போட்டுவிட்டு அவனை வாழ்த்தினார் அவன் தாய்.

அன்பன் நீ முதல் மதிப்பெண் எடுத்தாலும் இந்த மதிப்பெண் போதாது. இன்னும் மிகையாக எடுக்க வேண்டும். அப்போது தான் நீ மேலும் மேலும் அறிவை வளர்த்துக் கொள்ள முடியும்.

சரியம்மா...

பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த அன்பன் பள்ளியிலேயே நன்றாகப் படிக்கக் கூடியவன். தமிழ் வழியிலேயே படித்து வந்தான்.

அனைத்துப் பாடப் பிரிவிலும் ஆங்கில வழி மாணவர்களைக் காட்டிலும் மிகையான மதிப்பெண்களை எடுத்தவன்.

அடுத்த மாதத்தில் வரும் பொதுத் தேர்வுக்கு அணியமானான் அன்பன்.

பொதுத் தேர்வு எழுதிவிட்டு முடிவுக்காகக் காத்திருந்தான். தேர்ச்சியா அல்லது தேக்கமா என்ற முடிவுக்காக அல்ல.

முதல் வகுப்பா உயர் வகுப்பா என்ற சிந்தனையில் இருந்தான்.

அவன் நினைத்தது போலவே உயர் வகுப்பில் தேர்ச்சி பெற்றான்.

இனி என்ன செய்வது என்று வீட்டில் உள்ள எல்லாரிடமும் கலந்துரையாடிக் கொண்டிருந்தான்.

அன்பா, நீ முதல் பிரிவு ஆங்கில வழியில் படித்தால் நல்ல எதிர்காலம் கிடைக்கும் என்றார் அப்பா.

அப்பா, இதுவரை தமிழ்வழியில் படித்துவிட்டு ஆங்கில வழியில் படித்தால், ஒன்றும் புரியாது. மேலும் ஆங்கில வழியில் படித்தால் மனப்பாடம் தான் செய்ய முடியும். தமிழ்வழியில் படிததால் என் அறிவுத் திறனையும் வளர்த்துக் கொள்ள முடியும்.

டேய்... அறிவைப் பற்றி நீ பேசாதே. உனக்கு என்ன செய்வது என்று எங்களுக்குத் தெரியும்.

இல்லை அப்பா, இந்த சிற்றூரில் படித்திருந்த என்னை நகரத்தில் சேர்க்கப் போகிறீர்கள். ஏற்கனவே நகரில் சிறந்து விளங்கும் மாணவர்களுடன் நான் போட்டியிட வேண்டும். இதை எல்லாம் எண்ணிப் பார்த்தால் ஆங்கில வழிக் கல்வி எனக்கு ஒன்றும் விருப்பமாகப் படவில்லை.

டேய் எங்களுக்குத் தெரியும். நீ உன் வேலையைப் பார் — அப்பா.

சரி... சரி... நான் நன்றாகப் படிக்க வில்லை என்றால் என்னை எதுவும் கேட்கக் கூடாது.

இல்லையென்றால் நீ மாடு மேய்க்கப் போ. இப்படியெல்லாம் திமிராகப் பேசாதே என்று சீறினார் அம்மா.

அரசினர் மேல்நிலைப் பள்ளியில் முதல் பிரிவில் ஆங்கில வழியில் படிக்கத் தொடங்கினான் அன்பன். தமிழ் மட்டுமே அவன் தமிழ் வழியில் படித்தான். ஏன் எனில் அதை ஆங்கில வழியில் படிக்க முடியாது என்பதால்.

மற்றபடி கணிதம், இயற்பியல், வேதியல், கணினி பாடங்களை ஆங்கில வழியிலே படித்தான்.

அவனுக்கு மிகவும் கடினமாக இருந்தது. இருந்தபோதும் படித்துப் பார்ப்போம் என்று படிக்கத் தொடங்கினான்.

அவனால் முடியவில்லை.

ஐயா, நான் ஆங்கில வழியில் பயில விரும்பவில்லை.

ஏன்? நீ நல்ல மதிப்பெண் எடுத்திருக்கிறாயே. ஏன் ஆங்கில வழியில் பயிலக் கூடாது,

இல்லை ஐயா, எனக்கு தமிழ் வழியில் பயின்றால் இன்னும் சிறப்பாகப் படிக்க முடியும்.

சரி... சரி... உன் விருப்பப்படியே தமிழ் வழியில் படிக்க இசைகிறேன்.

இரண்டு மாதங்கள் கழித்து...

டேய்... என்ன தமிழ் வழியில் படிக்கிறாயாமே... தமிழ் என்ன உனக்குச் சோறு போடுமா?

இல்லை அப்பா... எனக்கு ஆங்கிலவழிக் கல்வி அறவே

புரியவில்லை. அதனால் நான் தமிழ் வழியில் ப்டிக்கலாம் என்று முடிவு செய்தேன்.

உனக்குப் புரியவில்லை எனில் இன்னும் தொல்லைப்பட்டுப் படிக்க வேண்டும். அதை விடுத்து தமிழ் வழியில் ஏன் படிக்க வேண்டும். இன்று உன் பள்ளிக்கு வந்தேன். தலைமை ஆசிரியரிடம் மீண்டும் உன்னை ஆங்கில வழியில் சேர்க்கச் சொல்லிவிட்டேன்.

அன்பனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. சரி வருவது வரட்டும். நம் வழியிலேயே செல்வோம்.

பள்ளி வரும் இடைநிலைத் தேர்வுகள் உள்பட அனைத்துத் தேர்விலும் அவனால் மதிப்பெண் சரியாக எடுக்க முடியவில்லை. எல்லாவற்றிலும் ஒற்றைப்படை எண்ணைத் தாண்டவில்லை அவனுடைய மதிப்பெண்கள். தமிழ்ப் பாடம் அதற்கு விலக்கு. அதில் மட்டும் ஓரளவு நல்ல மதிப்பெண்களை எடுத்திருந்தான்.

இப்படியே ஓராண்டு சென்றது. படிப்பு அவனுக்கு ஒத்து வராததால் அவன் ஊர் சுற்றத் தொடங்கினான். சரியாகப் படிப்பதில்லை. முதல் ஆண்டில் எப்படியோ பார்த்து எழுதி எடுத்து தேர்ச்சிப் பெற்றுவிட்டான்.

இரண்டாம் ஆண்டும் அவனால் படிப்பைத் தொடரமுடியவில்லை.

இருந்தும் என்ன! இப்போது அவன் பார்த்து எழுதுவதையே தொழிலாகக் கொண்டான். பார்த்து எழுதித் தேர்ச்சி பெற்றுவிடலாம் என்று எண்ணிப் படிப்பதில் ஆர்வம் இல்லாமல் போனான்.

இரண்டாம் ஆண்டில் சில பாடங்களில் செயல்முறை தேர்வுகளில் எடுக்க வேண்டிய மதிப்பெண்களை முழுதாக எடுத்துவிட்டான். அத்தேர்வு பள்ளி ஆசிரியர்களாலே போடப் படுவதால் ஆசிரியர்களிடம் கெஞ்சி அதிக மதிப்பெண்களை எடுத்து விட்டான்.

இறுதித் தேர்வில் பார்த்து எழுதி எப்படியோ தேர்ச்சியும் பெற்றுவிட்டான். ஆனால் எல்லாப் பாடங்களிலும் குறைந்த மதிப்பெண்களையே எடுத்துத் தேர்ச்சி பெற்றிருந்தான்.

அவன் தேர்ச்சி பெற்றதே அவன் தகுதியால் அல்ல. எப்படியோ தேர்ச்சி மட்டும் பெற்றுவிட்டான்.

பெற்றோர்களும் அதிர்ச்சி அடைந்தனர். அவனிடம் விளக்கம் கேட்டனர். அவனால் என்ன விளக்கம் கொடுக்க முடியும்.

அம்மா, நான் பத்தாம் வகுப்பு வரை தமிழ்வழியில் தானே பயின்றேன். என்னை நீங்கள் தான் இப்படிச் சீரழித்து விட்டீர்கள். என் எதிர்காலத்தையும் அல்லவா சேர்த்தே அழித்தீர்கள். இனி என்ன செய்ய வேண்டும் என்று நானே முடிவு செய்துகொள்கிறேன். என் வழியில் தலையிடாதீர்கள். ஆனால் நான் தவறான பாதையில் என்றுமே செல்ல மாட்டேன். அதனால் என்னைப் பற்றி நீங்கள் கவலைப்படத் தேவையில்லை.

என்னடா இப்படிச் சொல்கிறாய்? உன்னைப் பற்றி, உன் முன்னேற்றம் பற்றி எங்களுக்கு ஆர்வம் இல்லை என்று நீ நினைக்கிறாயா?

என் முன்னேற்றத்தில் உங்களுக்கு ஆர்வம் இல்லை என்று சொல்ல வரவில்லை. என் மீது நீங்கள் வைத்த நம்பிக்கை அளவு கடந்தது. ''அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு'' என்று சொல்வார்கள். அது போல என் மீது நீங்கள் வைத்த அளவற்ற நம்பிக்கையால் தான் என் முன்னேற்றம் தடைப்பட்டது.

சரி... சரி.. இனி உன் வழியில் நாங்கள் தலையிட விரும்பவில்லை. உன் மீது மிகையான அளவுக்கு நம்பிக்கை வைத்தது தவறு. என்று நாங்கள் ஒப்புக் கொள்கிறோம்.

இது அன்பனுக்கு மட்டுமே நேர்ந்த இழிவு அல்ல. தமிழ்நாட்டில் எதிர்கால அறிஞர்களாக வரக் கூடிய தகுதி பெறும் அத்தனை பெயருக்கும் நேரும் இழிவுகள்தாம். தாய்மொழியை மதிக்காத எந்த ஒரு நாடும் தன்மானத்தோடு வாழ்வதில்லை. நம் தாய்மொழியை நாம் இழித்துப் பழித்தோம். அதன் பயனாக இன்று நம் மகனின் வாழ்வு வீணாகிப் போய் விட்டது உண்மைதான். இனி இந்தத் தவறை யாரும் செய்யாதவாறு அரசு தான் சட்டம் இயற்றவேண்டும் என்று தாயிடம் அன்பனின் தந்தை கூறினார்.

*

## இசுரேலும் தமிழகமும்

அயல்நாடுகளில் தனி ஒருவரின் ஆண்டு வருமானம் 25,585 அமெரிக்கத் தாலர்கள். தமிழர் ஒருவரின் ஆண்டு வருமானம் 382 தாலர்கள் மட்டுமே.

✻✻✻

இசுரேல் நாட்டில் நிலமும் குறைவு, நீர் வளமும் மிகக் குறைவு. தமிழ்நாட்டிலோ நீருக்கும் நிலத்திற்கும் குறைவில்லை. இசுரேல் நாட்டில் ஒருவருக்குப் பயன்படுத்தப் படும் விளைநிலம் 0.1(ஹெக்டேர்) கிடைக்கும் நீரளவு 30 இலக்கம் பதினம்(லிட்டர்). தமிழருக்கு கிடைக்கும் நில அளவு 0.2 (ஹெக்டேர்) நீரளவு 130 இலக்கம் பதினம்(லிட்டர்) இருந்தபோதிலும் இசுரேல் நாட்டு மாந்த வருமானம் 15,000 தாலர் தமிழருடையது 382 தாலர்.

✻✻✻

இசுரேல் நாட்டு வளத்திற்கு அம் மக்களின் நிலம் மற்றும் நீர் மேலாண்மை முறையே. உலகத்திற்குச் சொட்டு நீர் பாசனத்தை அறிமுகப் படுத்தியவர்கள் இவர்களே.

மேலும் இசுரேல் ஒரு தனி அரசு நாடு. அதனால் வேற்று நாட்டுச் சுரண்டல் இல்லை. ❑


# தமிழ்ச்சிட்டு

**கட்டண விளக்கம்**


| | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | 36.00 | 200.00 |
| தனியிதழ் | 3.00 | |
| வாழ்நாள் கட்டணம் | 350.00 | |

**தமிழ்ச்சிட்டு** (சிறுவர் கலை இதழ்)
செந்தமிழ் அடுக்ககம், மேடவாக்கம் கூட்டுச் சாலை,
சென்னை - 601 302. தொலைபேசி : 227 0231.

# கழுதை உதைத்த கதை

— 'தமிழூர்' தேன்

கழுதை என்ற சொல் நம் வாழ்வில் நிகழும் உரையாடல்களில் அடிக்கடி இடம்பெறும்! சினமான நேரங்களிலும், மிகவும் அன்பான நேரங்களிலும் 'கழுதை'யே வந்து வன்மையாகவும், மென்மையாகவும் நம்மால் ஒலிக்கப்பட்டு உதை கொடுக்கும்.



அவ்வாறான கழுதை மிகவும் அருவருப்பான தோற்றமும் கேட்பதற்கு இனிமையற்ற புதுமையான குரலும் உடைய தாயிருக்கும் எனப் பார்க்காதவர்கள், கேட்காதவர்கள் உட்பட எல்லாரும் கருது வந்துள்ளோம். ஆனால் கழுதையைப் பார்க்கும் போது இரங்கத்தக்க புதுமையான தோற்றமும், வியப்பான குரல் நீட்சியும் உடையதா யிருக்கும்.

'கழுதை அழுத கதை' என்ற ஒரு பாவியம் பாவலரேறு ஐயா அவர்களால் அனைவர் உள்ளத்திலும் அழத்தக்க வகையில் பதிந்து சிறப்புப் பெற்ற கழுதையைப் பற்றிய ஒரு உண்மை நிகழ்வுதான் இது. சொல்லாய்வறிஞர் அருளியாரின் வழி அவர் கண்ட காட்சி இது. இதை ஏற்ற சுவையோடு இத் தமிழ்க் குமுகாயத்துடன் ஒப்பிட்டு எழுதப் பெறுகிறது.

கழுதைகள் உலவப் பெறாத அத் தெருவிலே ஒரு கழுதை தப்பி வந்துவிட்டது. ஆனால் எதற்கும் கவலை யுறாது தப்பிவந்துவிட்டோம் என்ற மிரட்சியுடன் எந்தப்

பகுதியை நோக்கி நடக்கலாம் என்றவாறு எண்ணியோ யென்னவோ ஒரு தெருவின் முனையில் வந்து நின்றது. மிரட்சியுடன் புதிய, வியப்பான, குள்ளமான குதிரை வடிவம் உடைய அக்கழுதையை அத் தெருவை உரிமையாகக் கொண்ட நாயொன்று கண்டதும் மிகவும் சினத்துடனும், அத்தெருவைக் காப்பாற்றும் உரிமை கொண்ட செருக்குடனும் அந்தக் கழுதையைச் சுற்றிச் சுற்றி முகம் நோக்கிக் குரைத்தது. கழுதை மிகவும் பொறுமையுடனும், அமைதி யுடனும் நாய் தன்னைக் குரைக்கும் பக்கமெல்லாம் தன் முகத்தைத் திருப்பித் திருப்பிக் காட்டியவாறு நாயை நோக்கியது. எந்த எதிர்ப்புணர்வையும் காட்டாத அந்தக் கழுதையின் அமைதி நாயின் குரைப்பொலியை மேலும் உயர்த்தியது. மிகவும் பொறுமையுடன் நாயின் திமிர்த்தொலியை அதுவந்த பக்கமெல்லாம் தன் முகம் திருப்பித் திருப்பித் தாங்கிய கழுதை திடுமென அதற்குள்ள அத்துணை வலிவையும் ஒன்று திரட்டித் தன்னை மறந்து குரைத்தவாறிருந்த அந்நாயை ஒரே உதையில் சுருட்டிச் சுருண்டு விழச் செய்தது.

பொறுமையுடன் எல்லா இழிவுகளையும், மாந்தத் தன்மையுடன் தாங்கிக் கொண்டுள்ள தாய்த் தமிழினமும் என்றும் செவிடாகவும் குருடாகவும், ஊமையாகவும் இருக்கும் என்று எந்த இனமாயினும் கருதிக் கொண்டிருக்குமானால் நாய் போன்று உதை வாங்க வேண்டி வரும்.

மேலும் ஓர் இன அளவிலான கருத்தையும் உணரலாம். நாய் உலவும் உரிமையுள்ள தெருவில் இடந்தவறிக் கழுதை நுழைந்து விட்டது ஆரியப் பார்ப்பனர்கள் போல. அக் கழுதையைத் துரத்த நாய் குலைத்துக் கொண்டே யிருக்கிறது. குரைக்கிற நாய் கடிக்காது என்பது போலத் தமிழனும் வேற்றின வரவைக் கண்டு பொருமிக் கொண்டு துரத்த மனமின்றி தாய்மையுணர்வுடன் அனைத்துத் துறைகளிலும் காலம் பார்த்து, தன்னாளுமை யுடன் தம்மை உதைத்து பார்க்கும் அவனுக்கு இடமளித்துக் கொண்டுள்ளான் என்பதை உணர வேண்டும்.

✻

# மணிமேகலை

## பாவலர் இளஞ்சித்திரன்

கற்பின் செல்வி மாதவியாள்
  கண்ணின் மணியாய்ப் பிறந்தவளாம்!
பொற்பின் அரசி பூமுகத்தாள்;
  பூவுல கிலவள் சிறந்தவளாம்!

இளமையில் ஆசை துறந்தவளாம்!
  எழிலில் அவள்மணி மேகலையாம்!
வளமையில் இருந்தும் மறந்தவளாம்;
  வாழ்க்கை இன்பம் இழந்தவளாம்!

மணிமே கலையைப் பாவியமாய்
  வடித்துத் தந்தவர் சாத்தனையா!
அணிமேல் அணியாய் ஓவியமாய்
  அவளைச் செய்தவர் சாத்தனைய

தேனினும் இனிய தெள்ளுதமிழ்;
  தித்தித் திருக்கும்; அருவிநடை!
ஊனினை, உயிரை உருக்குமம்மா!
  உருக்கிநல் இன்பம் பெருக்குமம்மா!

உறுபசி தீர்க்கும் கொள்கைக்கே
  உலகில் முதலிடம் தந்ததம்மா!
நறுமண மணிமே கலையம்மா!
  நம்தாய்த் தமிழிடை அணியம்மா!

---

# உன் கடமை!

—'தமிழூர்' தேன்—

விடியும் முன்பே எழுந்திரு!
  விரைந்து கடன்க் முடித்திடு!
உடற்பயிற்சி நேரம் ஒன்றை
  உறுதி யாக ஒதுக்கிடு!

பல்லை நன்கு துலக்கியே
  பளிச் செனவே சிரித்திடு!
நல்ல வேம்பு வழலையில்
  நன்கு தேய்த்து குளித்திடு!

உண்ணும் போது அமைதியாய்
  ஒழுங் குடனே உண்ணுவாய்!
எண்ணி செய்யும் செயல்களில்
  எது முதலென வகையிடு!

கல்விக் கழகம் செல்கையில்
  கருத் துடனே ஒதுங்குபோ!
செல்வம் கல்வி ஒன்றுதான் !(மட்டும்தான்)
  சீர்மை யுடன் கற்றுவா!

எளிய உடை அணிந்துசெல்!
  ஏற்ற உணர்வை ஏந்திவா!
தெளிந்த அறிவைத் தேர்ந்துநில்!
  தேற்றம் வாழ்வில் படிப்படியே!

கற்று வந்த கல்வியைக்
  கசடறவே கருத்தில் வை!
கருத்தில் வைத்த கல்வியை
  காலம் முழுதும் கடைப்பிடி!

நல்ல செயல் செய்யவே
  நலிந்த உடலும் அடிப்படை!
வல்ல வனாய் மாறிடும்
  வழியை உணவில் ஏற்றிடு!

உற்ற நண்பன் ஒருவனை
  உயிர் உறவாய் தேர்ந்திடு!
எற்றைக் காயினும் அவனைநீ
  ஏய்க்கும் சிறுமை அகற்றிடு!

அறிஞர் பலரின் வாழ்வினை
  ஆழ்ந்து ஊன்றி பயின்றிடு!
அறிஞர் என்னும் அவர்வழி
  வாழ்ந்து ஒழுக்க நடையிடு!

தென்மொழி. மேடவாக்கம். சென்னை - 601 302